முதலாளிகளின் சுவர்க்கபுரியே இந்தியாவின் புதிய அரசியல்

Phone No. 4502 | விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458 | [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. **MALAI MANI**

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (21—11—49) வெளியீடு (22—11—49) [இதழ் 96

பொது மக்கள் எண்ணத்தைத் தகர்த்துத் தரைமட்டமாக்கினர்

வாக்கெடுப்பு நடத்திப் பார்த்தால் வீழ்ச்சியுறுவீர், ஒருதலை!

முதலாளித்துவத்துக்குத் துதி பாடுவோர் பாட்டாளிகளுக்குப் பாதுகாவலரா ?

"இந்தியாவின் புதிய அரசியல் முதலாளிகளுடையவும் ஜாகீர்தார்களுடையவும் சுவர்க்கமேயாகும். இந் நாட்டில் சமதர்மம் நிறுவனமாவதைத் தடை செய்வதற்கென்றே இவ்வரசியல் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

நல் வாழ்வை நாடி நின்ற பொது மக்களின் நம்பிக்கைகளனைத்தையும் தகர்த்து நாசமாக்கிவிட்டது புதிய அரசியல். இந்த அரசியல் அனுமதித்திருக்கும் பலமிக்க மத்திய ஆட்சித் தன்மை இந்தியாவை ஒரு 'யதேச் சாதிகார பாஸிஸ்ட் நாடாக'த்தான் ஆக்கும்.

இந்த அரசியல் இப்போது நிறைவேற்றப்பட்டு விட்டாலுங்கூட, இந்திய மக்கள் இதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பொது மக்கள் வாக்கெடுப்பொன்று நடைபெறும் பட்சத்தில், இந்த அரசியலை மக்கள் 'வீழ்த்தி விடுவார்கள்' என்பது உறுதி.

அடிப்படை உரிமைகளெனக் கூறப்பட்டிருப்பவை, மக்கள் கண்ணில் மண்ணைத் தூவ, மேற்கொள்ளப்பட்ட வெறும் நாடகமேயாகும். ஒரு கையால் கொடுக்கப்படும் உரிமைகள் மற்றொருகையால் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றன."

சுதந்திர இந்தியாவின் சுயராஜ்ய நடப்புக்கு நம் 'தேசபக்த'த் தலைவர்கள் தயாரித்திருக்கும் புனிதமான புதிய அரசியலுக்கு அரசியலமைப்பு சபையின் சோஷலிஸ்டுப் பிரதிநிதி தோழர் தாமோதர் ஸ்வாரப்சேத் தந்திருக்கும் 'சர்டிபிகேட்' இது.

இந்திய அரசியல் நகல் மூன்றாவது முறையாக வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 'பொறுப்புள்ள' உறுப்பினர்கள் சிற்சிலர் தங்கள் தங்கள் கருத்துரைகளை வழங்கியுள்ளனர். சோஷலிஸ்ட் உறுப்பினர் தோழர் சேத் புதிய அரசியலில் பரிணமித்து நிற்கும் முதலாளித்துவ வித்துக்களை எடுத்துக் காட்டி பொது மக்கள் எண்ணத்தில் மண்ணைப் போட்டது இவ்வரசியலென எடுத்துக் காட்டுகளோடு பேசியிருக்கிறார். எதிர்பார்த்தபடி அமையவில்லை புதிய அரசியலெனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் தோழர் பிரகாசம். வரையறுக்கப்பட்ட ஓரளவுக்குத்தான் என்னால் ஆதரவு தர முடியுமெனக் குறிப்பிடுகிறார் தோழர் எச். வி. காமத். இந்த இடைக்கால ஏற்பாடு முடிந்ததும், வயது வந்தோர்க்கு வாக்குரிமை அடிப்படையில் வேறு புதிய அரசியல் வகுத்தே தீரவேண்டும், இது நிலைபெறக் கூடாதெனத் தனது வெறுப்பைக் காட்டியுள்ளார் பேராசிரியர் ஷிபன்லால் சாக்ஸேனா. அரசிலார் அம்சங்கள் சில பிடிக்கவில்லை யென தோழர் நிக்கால்ஸ்ராய் குறைபட்டுள்ளார். இந்திய வாழ்க்கை முறைக்கேற்ப இப்புதிய அரசியலைத் திருத்தியாக வேண்டுமெனத் தெளிவுபடுத்துகிறார் டாக்டர் ரகுவீரா.

இவ்வண்ணம் உறுப்பினர்கள் பலரும் தங்கள் அதிருப்தியைப் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

வயது வந்தோர்க்கு வாக்குரிமைத் தத்துவத்தை மூலையிலொதுக்கி, 100-க்கு 5 அல்லது 6 பேரே வாக்குரிமை பெற்றிருந்த நிலையில் அவர்களைக் கொண்டு 'கைதூக்கிகளை' சிருஷ்டித்து, தினைத்துணையும் பிரதிநிதித்வம் இல்லாத ஒரு சபையை நிறுவி, ஒரு கட்சிக் கோட்பாட்டுக்கே இடமளித்து ஓரங்க நாடகமாகப் பன்னாள் ஆடி, இந்திய உப கண்டத்துக்கு அரசியல் தயாரித்துவிட்டோமென்று இன்று பிரகடனஞ் செய்யும் ஒரு கும்பலின் கூற்றை, பொறுப்பும் கண்ணியமும் பொது நலத்தில் அக்கரையும் கொண்ட யார்தான் ஏற்கமுடியும்? முப்பது கோடிக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய, பல்வேறு இனம், மொழி, நாகரிகம், நடையுடைபாவனை கொண்ட மக்கள் கூட்டப் பலிந்து வாழும் ஒரு உபகண்டத்துக்கு யதேச்சாதிகார முறையில் அரசியல் வகுக்கப்பட்டு, மக்கள் நலமென மனதிற்கொள்ளாது, ஏககட்சி ஆதிக்கத்தோடு காரியஞ் செய்யவந்தாரின் போக்கை நாம் ஆரம்பத்திலிருந்தே கண்டித்து வந்திருக்கிறோம்; இவர்கள் வகுக்கும் அரசியல் எவ்வகையிலும் நம்மைக் கட்டுப்படுத்தாது என்று கூறி வந்திருக்கிறோம்; தென்னாட்டின் உண்மையான பிரதிநிதிகள் உரிய அளவில் இடம் பெறாத ஒரு சபை வகுக்கும் அரசியலும், நிறைவேற்றும் சட்டங்களும் நமக்குத் திருப்தியூட்டுந்தகைமையனவாயிருத்தல் எங்ஙனமெனக் கேட்டுவந்திருக்கிறோம்; திராவிட சமுதாயத்தை அவமதித்து அலட்சியப் படுத்தித் தயாரிக்கப்பெறும் ஒரு அரசியல் திராவிட சமுதாயம் நிறைந்து வாழும் இத் தென்னாட்டில் வரவேற்கப் படவே மாட்டாதென வலியுறுத்திக்கூறி வந்தி

[இரண்டாம் பக்கம் பார்க்க]

"இரண்டாண்டு கால தேசீய ஆட்சிக்குப் பின் என்ன கண்டோம்?"

'பிரிட்டிஷ் காமன்வெல்த் புரையோடிப் போகவேண்டுமா?'

பிரிட்டன் 'ட்ரிபியூன்' எச்சரிக்கை

தென்னாப்பிரிக்கா நிலைமை பற்றி அறிக்கை யொன்று வெளியிடுமாறு பிரிட்டிஷ் சர்க்காரை வற்புறுத்தி 'ட்ரிபியூன்' பத்திரிகை தனது 18-ந் தேதி இதழில் எழுதியுள்ளது.

தென்னாப்பிரிக்க யூனியனில் நடைவுற்ற சில்லரைச் சச்சரவுகளையெல்லாம் குறிப்பிட்டு, அப்பத்திரிகை எழுதுவதாவது,—'தென்னாப்பிரிக்காவில் இரண்டாண்டு காலமாக தேசிய ஆட்சி நடைவுற்ற பிறகு, நாம் அங்கு என்ன காண்கிறோம்? தேசிய சர்க்காருக்கும் ஐரோப்பியரல்லாத யூனியன் மக்களுக்குமிடையேயிருக்க வேண்டிய சாதாரணத் தொடர்புகளிலெல்லாம் மாபெரும் பிளவையும் வீழ்ச்சியையும் காண்கிறோம். காமன்வெல்த் உள்ளுக்குள்ளேயே புரையோடித் தகர்ந்து போவதற்கான நிலைதானேற்படும் இத்தகராறை நீடிக்கவிட்டால்?

வ. ஆ. திருப்பத்தூரில் கழகப் பொதுச் செயலாளர்



வ. ஆ. திருப்பத்தூர் நகர தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் பேசும்போது எடுக்கப்பட்ட படம். படத்தில் நகரசபைத் தலைவர் தோழர் சுப்பிரமணியம் அவர்களையும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களையும் காணலாம்.

ஐரோப்பிய நாடுகளுக்கு பாகிஸ்தான் வர்த்தகத் தூதுக்குழு

பாகிஸ்தான் வர்த்தகத் தூதுக்குழுவொன்று நவம்பர் 27-ல் கராச்சியிலிருந்து ஜெர்மனிக்குப் புறப்படுகிறதெனத் தெரிகிறது. பெல்ஜியம், நார்வே, செக்கோஸ்லோவேக்யா இன்னுமிதர கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுக்கெல்லாம் மேற்படி தூதுக்குழு செல்லுமெனத் தெரிகிறது.

சமஸ்தான இலாகாவில் மாற்றம்

ஐதராபாத்தின் இராணுவ கவர்னர் மேஜர்-ஜெனரல் ஜே. என். சௌத்ரி டிசம்பர் முதல் தேதியிலிருந்து இந்திய சர்க்கார் பாதுகாப்பு இலாகாவில் இடம் பெறுவாரென்றும், சமஸ்தான இலாகா காரியதரிசி தோழர் எம். கே. வெல்லோடி ஐ. சி. எஸ். அவர்களுக்குப் பதில் ஐதராபாத் கவர்னராவாரென்றும் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது. சமஸ்தான இலாகா ஆலோசகர் பதவியும் டிசம்பரில் ரத்து செய்யப்பட்டு, தோழர் வி. பி. மேனன் சமஸ்தான இலாகா காரியதரிசியாவாரென்றும் அக்குறிப்பு கூறுகிறது.

சௌத்ரிக்குப் பதில் கவர்னராக தோழர் வெல்லோடி நியமிக்கப்படுவதால், ஐதராபாத் நிர்வாக நிலையில் எவ்வித மாறுதலும் இப்போது ஏற்படாதென்றும், வெறும் நிர்வாகத் தலைமை மாற்றமாகவே இதைச்சொல்லவேண்டுமென்றும், கூறப்படுகிறது.

உணவுப்பெருக்கம் உயர்ந்தது, காண்!

சென்னை மாகாணத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டுவந்த நிலப்பரப்பில் 1949 செப், 30 வரை கிடைத்தத் தகவல்படி 2 சத விகித உயர்வு காணப்படுவதாகக் கூறப்படுகிறது. முன்பு 6,139 000 ஏக்கர் சாகுபடி நடந்ததென்றும் இப்போது 6,260 000 ஏக்கர் நடக்கிறதென்றும் சர்க்கார் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

காவிரிக் கரையோரப் பகுதிகளில் காலராத் தடுப்பு

சர்வதேச வல்லுநர்கள் சிபார்சு

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த காவிரிக்கரையோரப் பகுதிகளில் காலரா நோய்த் தடுப்பு வேலைகளைத் தீவிரமாகச் செய்யவேண்டுமென சர்வதேச காலரா நோய் ஆராய்ச்சி வல்லுநர்களும் உலக சுகாதார ஸ்தாபனத்தாரும் சிபார்சு செய்துள்ளனர். இவர்கள் இப்போது புதுடெல்லியில் காலரா நோய் பற்றி கூட்டுமுறை ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

இத்தடுப்பு வேலையை உலக சுகாதார ஸ்தாபனத்தின் காலரா கட்டுப்பாட்டுக் குழுவொன்று ... டுத்தாண்டில துவக்கும்.

மாலை மணி

சென்னை 21—11—49 திங்கட்கிழமை

ஆசை இருக்கிறது :: :: அச்சம் தடுக்கிறது!

காங்கிரஸ்—ராஷ்ட்ரியசுயம் சேவா சங்கம் இவை இரண்டும் இணைந்து வாழ்வதற்கான முறையில், பரிமாறப்பட்டு வந்த 'காதற் பேச்சுக்கள்' முறிந்துவிட்டன. அந்த நிலை ஏற்படுவதற்கானவிளக்கத்தை, அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி இப்பொழுது அறிவித்துவிட்டது.

காங்கிரஸ் தொண்டர்கள் காங்கிரஸ் சேவாதளத்தில் தான் அங்கம் பெறலாமே யன்றி, ரா. சு. சே. சங்கம் போன்ற இதர சங்கங்களில் தொடர்பு கொள்ளக்கூடாது என்று இப்பொழுது திட்டமாக விளக்கிவிட்டிடுக்கிறது.

இதற்கு முன்பு கூடிய காரியக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானம், ரா. சு. சே. சங்கத்தினரும் காங்கிரசில் சேரலாம் என்ற குறிப்பினைத் தெரிவிப்பதாக இருந்த காரணம் பற்றி, நாட்டினர் பலரும் குறிப்பாக காங்கிரஸ்காரர்களே பலரும் தங்கள் தங்கள் கண்டனத்தை சென்ற சில நாட்களாக, நாட்டின் திக்கெட்டிலிருந்தும் பொழிந்ததைக் கண்டோம். காந்தியாரின் உயிரைப் போக்க எந்த மூர்க்கக் குணம் படைத்த சங்கம் காரணமாக இருந்ததோ, இன்னும் எந்தச் சங்கம் வகுப்பு துவேஷ விஷத்தைக் கக்கி நாட்டை நாசமாக்க முயற்சித்துக்கொண்டு வருகிறதோ, அந்த ரா. சு. சே. சங்கத்தில் அங்கம் வகிப்போரைக் காங்கிரஸில் எக்காரணங்கொண்டும் சேர்க்க அனுமதிக்கக் கூடாது என்று இந்துமத மயக்கம் அதிகம் ஏறப்பெறாத காங்கிரஸ்காரர்கள் பலரும் கண்டனக் கணைகளைக் காரியக் கமிட்டியின் மீது ஏவினர்.

பண்டித நேரு அமெரிக்காவில் வலம் வந்துகொண்டிருந்த நேரத்தில்தான், காங்கிரஸ்காரர்களுக்குள் ரா.சு.சே. சங்கத்தைக் காங்கிரஸோடு இணைப்பது பற்றிய பல்வேறு பட்டக் கருத்துக்களும் பரிமாறப்பட்டன. சென்ற சில நாட்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாராமையா அவர்கள், கண்டனம் தெரிவிப்போரைக் கடிந்து கூறும் முகத்தான், "ரா.சு.சே. சங்கத்தார் எப்பொழுது காங்கிரஸில் சேரக்கூடாது என்று தடைசெய்திருந்தோம்? இப்பொழுது தடையை நீக்கிவிட்டதாகப் பதறுகிறீர்கள். ரா. சு. சே. சங்கத்தார் காங்கிரஸில் சேர்வதற்கு அன்றும் தடையிருந்ததில்லை; இப்பொழுதும் இருக்கவில்லை" என்னும் கருத்துபட சில சொல்லிவந்தார், பண்டித நேரு வந்து சேர்ந்த தற்குப் பிறகுதான், பட்டாபியின் படபடப்பு அடங்கிவிட்டதாகத் தெரியவருகிறது. ரா. சு. சே. சங்கம் பற்றிக் குறிப்பிடும் போது பண்டித நேரு, அது முற்றும் முடிந்த ஒரு வகுப்புவாத ஸ்தாபனந்தான், என்று தெளிவாக்கியிருக்கிறார். ரா. சு. சே. சங்கத்தின் ஆதரவு கிடைப்பதானாலும்—அதன் ஆதிக்கம் வளர்வதானாலும், எவ்வழியிலும் காங்கிரஸைக் கரையவைக்கும் கருவியாகவே அது இருக்க நேரிடும் என்று உணர்ந்த காரணத்தினாலோ, என்னவோ, பண்டித நேரு வந்து சேர்ந்த பிறகு, ரா.சு.சே. சங்கத்தைக் காங்கிரஸோடு இணைப்பதற்கில்லை என்ற விளக்கந்தரும் நிலை ஏற்பட்டுள்ளது.

என்றாலும், இந்த வெறியினை ஏற்றிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் ரா. சு. சே. சங்கத்தைக் காங்கிரஸோடு பிணைத்து வைக்க அரும்பாடுதான் பட்டு வருகிறார்கள். எவ்வளவுதூரம மதச்சார்பற்றக் கட்சி காங்கிரஸ் என்று சொல்லிக்கொண்டாலும், பட்டாபி போன்றோர்க்கு இருக்கும் உள்ளுணர்ச்சி அறாது போகிறது? இல்லை! இல்லவே இல்லை !!

காந்தியார் படுகொலை ஆகும் அளவிற்கு வெறியுணர்ச்சி ஊட்டிவந்தது ரா. சு. சே. சங்கமாகும் எனக் கருதி, காந்தியார் இறந்தவுடன் அதற்கு நாடெங்கும தடை விதித்தது இந்திய அரசாங்கம். மாகாண அரசாங்கங்களும் அந்தக் கட்டளையை நிறைவேற்றின. அதோடு தொடர்ந்து சென்னை அரசாங்கம் முஸ்லீம் லீக் தொண்டர் படையையும், கருஞ்சட்டைப் படையையும் தடை செய்தது. ஏன் இவை இரண்டும் தடைசெய்யப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது; நாட்டின் அமைதியைக் காக்க என்று எதேச்சாதிகார அரசாங்கம் பதிலிறுத்தது. அமைப்பு என்று ஒன்று இல்லாத கருஞ்சட்டைப் படைக்கும் கூடவா தடை என்று அன்று கேட்டோம் ? ஆம் என்று கூறிற்று அரசாங்கம் ! அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் இன்னமும முழுதாகக் கழியவில்லை. எந்த ரா. சு. சே. சங்கம் காந்தியாரின் கோரக் கொலைக்குக் காரணமாக விளங்கிற்றோ, அந்த ரா. சு. சே. சங்கத்தின் மீதிருந்த தடையை காங்கிரஸ் அரசாங்கம் நீக்கிவிட்டது ! காந்தியாரின் உடலிலிருந்து சிந்திய குருதியின் கறை மக்களின் இதயத்திலிருந்து இன்னமும் மறையவில்லை, அதறகுள் ரா. சு. சே. சங்கத்தை ஆரத்தழுவ அரசாங்கம் முற்பட்டுவிட்டது. காந்தியார் மீது காங்கிரஸ் ஆளவந்தார்கள் கொண்டிருந்த பற்றைவிட, ரா. சு. சே. சங்கத்திடத்து அவர்கள் கொண்டிருக்கும் பற்று அளவு கடந்ததாக இருக்கிறது ! இந்து மதப் பற்று அந்த அளவுக்கு அவர்களை ஆட்டிப்படைக்கிறது ! அவர்கள்தான் என்ன செய்வார்கள் !

காந்தியாரின் கொலைக் குற்றத்துக்குக் காரணமாக இருந்த ரா. சு. சே. சங்கத்திற்கு விடுதலை! நிரபராதியாக இருந்த—அந்தகைய பழிச் சொல்லுக்கு ஆளாகாமலிருந்த கருஞ்சட்டைப் படைக்கு இன்னமும் தடை! இந்த விசித்திர நீதி பரிபாலனத்தை இந்தக் காங்கிரஸின் ஆட்சியிலும், ஹிட்லரின் ஆட்சியிலும் தவிர வேறு எங்கு காண முடியும் !

ரா. சு. சே. சங்கம் சமுதாயத் தொண்டு புரியும் சங்கமாக மாறிவிட்டதென்றும், ஆகவே அது நாட்டிலே நடமாடலாம் என்றும் காரணஞ் சொல்லப்படுகிறது ஒரு சிலரால் ! சமுதாயத் தொண்டு புரியும் சங்கத்திற்கு ஆயுதம் ஏன் ? ஆயுதப் பயிற்சி அளிக்கப் பாசறை ஏன் ? கவாத்துப்பழகுதல் ஏன்? தடிதூக்கித் திரியவேண்டிய அவசியம் ஏன்? ராணுவம் போன்ற ஒரு தன்மையுடை ஏன்? இந்தக் கருத்தை சென்ற வாரத்தில் மேல்சபைக் கூட்டத்தில், பொது அமைதிப் பாதுகாப்பு மசோதா பற்றிப் பேசுகையில், டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி அவர்கள் அரசாங்கத்தை ஆணித்தரமாகக் கேட்டுள்ளார்.

நிலைமைகளை நாம் நன்கு ஆராய்ந்து பார்த்தால், காங்கிரஸுக்கு ரா. சு. சே சங்கத்தை ஆரத்தழுவிக் கொள்ள ஆசை இருக்கிறது என்பதும், அந்தத் தழுவுதலுக்கு நாட்டின் முற்போக்காளரின் நல்லுணர்ச்சி மாறுபாடாக இருப்பது கண்டு அஞ்சுகிறது என்பதும், ஆகவேதான் காங்கிரஸ் அரசாங்கம் அதனைத் தனியே நடமாட விட்டுவைத்திருக்கிறது என்பதும் தெளிவாகப் புலப்படும்.

காங்கிரஸ் தலைவர் பட்டாபி பேசிய பேச்சுக்களையும், இப்பொழுது காரியக்கமிட்டி நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தையும் பார்க்கும்போது, ரா.சு. சே. சங்கத்தைத் தன்னோடு சேர்த்துக்கொள்ள காங்கிரஸுக்கு **ஆசை இருக்கிறது ஆனால் அதனை அச்சம் தடுக்கிறது** என்பது விளங்கா நிற்கும் !

பயனுடைக் கால்நடைகள் கொலை மீது தடை?

சென்னை மாகாணத்தில் பசுக்கொலையை முற்றிலும் தடைசெய்வதற்கான இடமேனையும் சர்க்கார் ஆலோசித்து வில்லையென்றும, பசு உள்ளிட்ட பயனுடைக் கால்நடைகளைக் கொலைசெய்வதின் மீது தடைவிதிப்பது எவ்வளவு தூரம் பொருத்தமானதென்ற பிரச்சினையை மட்டும் சர்க்கார் ஆலோசித்து வருகின்றனரென்று மந்திரி தோழர் ஏ. பி. ஷெட்டி 19-ந் தேதியன்று சட்டசபையில் தெரிவித்தார்.

"ஆண்டவன்-மனிதன் தொடர்பில் சர்க்கார் தலையிடுவதா!"

காமத் கொணரும் 'அபூர்வ' மசோதா!

தற்கொலை முயற்சி இப்போது இ. பி. கோ. 309-பிரிவின் கீழ் சட்ட விரோதமாகக் கருதப்பட்டு, அப்படித் தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பவர் தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார். மத்திய சட்டசபையில் கொண்டுவரப் போவதாகத் தோழர் எச். வி. காமத் அறிவித்திருக்கும் மசோதா வொன்றில் 'தற்கொலை முயற்சியை சட்டவிரோதமாக்கக் கூடாதென'க் கோரப்படுகிறது.

'மனிதனுக்கும் அவனைப் படைத்தவனுக்கு மிடையே சர்க்கார் தனது தலையை நீட்டக்கூடாதென' தோழர் காமத் தனது மசோதாவுக்கான விளக்கத்தில் தந்துரைத்துள்ளார்.

எஞ்சினியரிங் கல்லூரியில் மாணவர் சேர்க்கை

சென்னை மாகாணத்திலுள்ள நான்கு எஞ்சினியரிங் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை வகுப்பு—மொழி—பிரதேசவாரியாக (தகுதி நிறைமையையும் உள்ளடக்கிச் செய்யப்பட்டதில் பார்ப்பனரல்லாதார்க்கு 233 ஸ்தானங்களும், பார்ப்பனர்க்கு 78 ஸ்தானங்களும், முஸ்லிம்களுக்கு 27 ஸ்தானங்களும், கிறிஸ்தவர்க்கு 26 ஸ்தானங்களும், ஆதித்திராவிடர்க்கு 25 ஸ்தானங்களும் கிடைத்தனவென்பதாக மந்திரி தோழர் பக்தவத்சலம் சென்னை மேல்சபையில் குறிப்பிட்டுள்ளார். பார்ப்பனரல்லாதார்க்கு வழங்கப்பெற்ற 233 ஸ்தானங்களும் ஏறத்தாழ சரிபகுதி பிற்பட்ட வகுப்பாருக்குக் கிடைத்ததென்றும் அவர் குறிப்பிட்டார்.

'வருடாந்திர தலைவர் ஏலம்' இனியிராது

சட்டசபைக் கட்சித் தலைவரின் பதவி ஆயுளை சட்டசபை ஆயுளுக்கொத்ததாகவே ஆக்கிவிடுவதென 19-ந் தேதியன்று கூடிய காங்கிரஸ் சட்டசபைக் கட்சி சிறப்புக் கூட்டத்தில் முடிவு செய்தனராம். மத்திய பார்லிமெண்டரி போர்டும் காங்கிரஸ் காரியக்கமிட்டியும் ஏற்கெனவே இம்முறைக்கு ஆதரவும் சம்மதமும் அளித்திருக்கின்றன.

தலைவரைக்கொன்று சர்க்காரை வீழ்த்த சதி

துருக்கித்தலைவர் இனோனுவைக் கொலை செய்து, அவரது சர்க்காரையும் வீழ்த்த சதி முயற்சி செய்ததாகக்கண்டுபிடிக்கப்பட்டு, எதிர்க்கட்சி டெபுடிகள் இருவர் 17-ந்தேதியன்று சர்க்காரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்ச்சில் பேசுகிறார்!

சீனக் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்ட பெரு நிலப்பரப்பின் ஆட்சியாளரோடு பிரிட்டன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். பிரிட்டிஷ் நலன்கள் முன்பின் இருந்தாலும், பொதுவாக நாம் அவர்களோடு உறவேற்படுத்திக் கொண்டேயாக வேண்டும்.

மாஸ்கோவிலுள்ள சோவியத் சர்க்காரோடு முழுக்க முழுக்க அரசியலுறவு வைத்திருக்கும் நாம், சீனாவில் முளைத்திருக்கும் அந்த இளை நாட்டை அலட்சியப்படுத்தி வருவது எப்படிப் பொருத்தமாகும்? —சர்ச்சில்

புயலுக்குப் பலி!

மசூலிப்பட்டணம், நவ. 19—

திடீரென ஏற்பட்ட புயலின் காரணமாக, கைக்களூர், குடிவாடா தாலுகாக்களில் எண்ணற்ற வீடுகள் சேதமாகிக் கிடக்கின்றன. குறைந்த அளவு 2,30 451 வீடுகள் என்று கூறப்படுகிறது. ஏறக்குறைய ரூ 6,61,570 [illegible], கால்நடைகள் வெள்ளத்தில் கொண்டு செல்லப்பட்டனவாம்.

103 பேர் இறந்தனர் என்று இதுவரை தெரியவருகிறது.

நெல்விளைக்கு 20,000 ஏகர் நிலங்கள் இன்னும் வெள்ளத்தில் ஆழ்ந்துள்ளனவாம். மற்ற சாகுபடி செய்யத்தக்க 30,000 ஏகர் நிலங்கள் வெள்ளத்தின் பயனாய், உழவுக்கு உபயோகமற்று கிடக்கிறது.

வனஸ்பதி மீது தடை

வனஸ்பதி எண்ணெய்த்தயாரிப்பின் மீது தடை விதிக்கும் உத்தியோகச்சார்பற்ற மசோதாவொன்று பம்பாய் சட்டசபையில் கொண்டுவரப் படுமெனத் தெரிகிறது.

கிழக்குப் பஞ்சாப் 'மந்திரி சபை அபிவிருத்தி'

சிமலா, நவ. 20—

கிழக்குப் பஞ்சாப் பார்கவா மந்திரி சபை விரைவில் விரிவாக்கப்படுமென்றும் மந்திரிகளின் எண்ணிக்கை ஐந்திலிருந்து ஏழாக்கப்பட்டு விடுமெனவும், மேற்கொண்டுவரும் இருவருள் ஒருவர் இந்து, மற்றொருவர் சீக்கியராக இருப்பரென்றும் கூறப்படுகிறது.

இப்போதைய பிரதமர் டாக்டர் கோபிசந்த் பார்கவா அக்டோபர் 17-ல் காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவராக வந்ததும், இரண்டு பேர் அடங்கிய மந்திரி சபையோடு அக்டோபர் 18-ல் ஆட்சியைத் துவக்கினர். பின்னர், அக்டோபர் 29-ல் மந்திரிகளின் எண்ணிக்கையை ஐந்தாக்கினர்.

ஊழியர் ஊதியத்தை உயர்த்த இயலாது!

ஆஸ்தியுமில்லை அதிகாரமுமில்லை

நிதி அமைச்சரின் பரிதாப நிலை!

மேல்சபை விவாதத்தால் விளங்கும் உண்மை

"பியூன்களுக்கு யுத்தகாலத்துக்கு முன்பு ரூ 12 என சம்பளம் இருந்தது நியாயமானதா"
—தோழர் சர்மா

"போதுமானதா அல்லவா என்பது எனக்குத் தெரியாது. அப்படித்தான் நீண்ட காலமாக இருந்துவந்திருக்கிறது'
—மந்திரி கோபால் ரெட்டி

"பியூன்களுக்கு ரூ. 5 சம்பளம் போதுமானது; அதை அதிகரிக்க முடியாதென்றால், மந்திரிகள் உட்பட அதிக சம்பளம் வாங்கும் அதிகாரிகள் சம்பளத்தைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?"
—தோழர் பொரா

"மந்திரிகள், சபை அங்கத்தினர் சம்பளத்தை நான் குறைக்க முடியாது."
—மந்திரி கோபால் ரெட்டி

கேள்வி:—"சம்பளத்தை அதிகப்படுத்த சட்டமியற்ற முடியுமென்றால், குறைக்கவும சட்டம் கொண்டுவரலாமே."

இது கடந்த, 18-ம் தேதியன்று சென்னை மேல் சபையில் அரசாங்க சேவகர் சம்பளம் பற்றி நடைபெற்ற விவாதம். சேவகர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பது உறுப்பினர் கருத்து. அதற்கு வழியில்லை என்பது அமைச்சரின் வாதம்! அதைத்தான் மேலே எடுத்துக்காட்டப்பட்ட வினாக்களும், அவற்றுக்கு அமைச்சர் தரும் விடைகளும் விளக்கிக் காட்டுவனவாயுள்ளன.

சேவகர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாத அமைச்சருக்கு அமைச்சர்கள், உறுப்பினர் ஆகியோரின் சம்பளத்தை அதிகரிக்கச் செய்வதற்கு மாத்திரம் அதிகாரமிருக்கிறதாம். என்னே விந்தை! "மந்திரிகளின் சம்பளத்தைக் குறைக்கச் சட்டம் கொண்டு வரலாமே" என்ற கடைசி கேள்விக்கு நிதி அமைச்சர் எத்தகைய விடையும் தர இயலாமல் மௌன விரதத்தை மேற்கொண்டிருக்கிறார்.

மந்திரியாரின் இந்த மௌன நிலை இம்மாகாண ஆட்சியாளரின் சுதந்தரமற்ற தன்மையை விளக்குவதாக இருக்கிறது.

அரசாங்க சேவகர்களுக்குச் சம்பளம் போதுமானதா, அல்லவா என்பதை அறிந்துகொள்ள அமைச்சரால் முடியவில்லையென்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அறிந்து கொண்டு அவர் செய்யப்போகும் காரியம் ஒன்றுமில்லையாதலால், அதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை போலும்! இதும் மேல்ல, ?ன்னும் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, இ மாதிரி கையை விரித்துக் கவலைப்படும் நிலையில்தான் இருக்கின்றனர் இம்மாகாண ஆட்சியாளர் இது ஒருபுறமிருக்க ஊழியர்களின் சம்பளத்திலேகூட மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கா

எதிர்பார்த்த அரசியல் அல்ல!

நான் எதை எதிர்பார்த்து ஏங்கியிருந்தோனே அதுவல்ல இப்போது இந்தியாவின் அரசியலாக வகுக்கப்பட்டிருப்பது. 'பஞ்சாயத் ராஜ்யத்தை' அடிப்படையாகக் கொண்டதொடு அரசியலையே நான் எதிர்பார்த்திருந்தேன். பிரிட்டிஷாரால் அலட்சியம் செய்யப்பட்டு இன்றும் அதே நிலையிலிருக்கும் லட்சாதி லட்சம் ஏழை மக்களுக்கு உணவும் உடையுமளிக்க வல்லது பஞ்சாயத்து ராஜ்யமே யாகும்.

—டி. பிரகாசம்

அவர்களுக்கும் :: :: அதிருப்திதான்!

'நிலம் ஒதுக்குவதில் சர்க்கார் கையாண்டுவரும் கொள்கைகண்டு அரசியல் தியாகிகள் மிக மிக அதிருப்தி யுற்றுக் காணப்படுகின்றனர். சிப்பந்திகளை அதிகப் படுத்துவது மூலம் இப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. தாமத மின்றி நிலங்கள் ஒதுக்கப்படும் வகையில் சர்க்கார் தங்களது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்று தோழர் பி. கந்தசாமிப் பிள்ளை 19ந் தேதி சென்னை சட்ட சபையில் குறைபட்டார்.

அந்தமானுக்கு அனுப்பப்படுவர்

முன்னாள் போர்வீரர்கள் சுமார் 100 பேரை, அந்தமான் சென்று வாழ்க்கை வசதி செய்துகொள்ள இந்திய சர்க்கார் அனுமதித்துள்ளனர். தேர்ந்தெடுக்கப்பெறும் இத்தகைய வீரர்கட்கு ஆரம்பச் செலவுக்குச் சிறிது பண உதவியும், குடும்பமொன்றுக்கு 8-ஏக்கர் வீதம் நிலமும் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

ருக்கு மிடையே உயர்வு தாழ்வு இருந்து வருகிறது. இதை நீக்கி சமநிலை ஏற்படுத்தும் சக்தி இம்மாகாணத்துக்குக் கிடையாது. இதுபற்றி தோழர் சூரியநாராயண ராவ், நிதி அமைச்சரைக் கேட்ட கேள்விக்கு நிதி அமைச்சர், மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தையும், மாகாண சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தையும் சமநிலைக்குக் கொண்டு வர முடியாதென்று திட்டமாகச் சொல்லியிருக்கிறார்.

தங்கள் சிப்பந்திகள் திருப்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் சர்க்காருக்கு நம்பிக்கை உண்டா? என டாக்டர் ஜான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில்கூறாமல் மௌனவிரதமிருக்கிறார். இவையெல்லாம் எதைக்காட்டுவன? அரசியலாரின் சுதந்திரமற்ற தன்மையை அல்லவா?

இனி நடப்பவை

திருவல்லிக்கேணி-நடராஜா கல்விக்கழகத்தின் சார்பில் 21-11-49 திங்கள் மாலை 5-30 மணிக்கு புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உருவப்படத் திறப்பு விழா நடைபெறும். தோழர் நாரணதுரைக்கண்ணன் தலைமைவகிப்பார். தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைப்பார். தோழர் அ. இளங்கோவன் சொற்பொழிவாற்றுவார். இடம்:—மல்லன் பொன்னப்ப முதலித்தெரு, திருவல்லிக்கேணி.

* * *

கும்பகோணம்—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா 4-12-49 ஞாயிறு அன்று நடைபெறும். அதுபோது தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் தோழர் சி. என் அண்ணாத்துரை எம். ஏ; ஈ. வி. கே. சம்பத், கே.கே. நீலமேகம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இடம், காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

* * *

சூளை—சென்னை, சூளை இந்து ஒற்றுமைக் கழக உயர் நிலைப்பள்ளி மாணவர் மன்றத்தின் சார்பில், 22-11-49 செவ்வாய் மாலை 4-30 மணிககு கப்பலோட்டிய தமிழன் (வ. உ. சி.) திருநாள் நடைபெறும். அதுபோது தோழர் அ. இளங்கோவன் அவர்கள் தலைமையில் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

நீத்தார் நினைவு

சலகண்டபுரம், நவ. 17—
இவ்வூர் தோழர் ப. கண்ணன் அவர்களின் உடன் பிறந்தார் தோழர் அ. ப. அர்த்தனாரி அவர்கள் 16-11-49 அன்று இயற்கையெய்தியமை குறித்து, வரும் 28—11—49 திங்கட் கிழமையன்று நீத்தார் நினைவுகடன் ஆற்றப்படும்.

திருமணங்கள்

பணகுடி, நவ 16—
இவ்வூர் 'மாலை மணி" விற்பனையாளர் தோழர் வி. வன்னியன் அவர்களுக்கும், தோழியர் சிவகாமிக்கும 11—11—49 வெள்ளியன்று சீர்திருத்தத்திருமணம் சிறப்புற நடைபெற்றது. இதன் நினைவாக ரூபாய் ஒன்றுவரப்பெற்றோம் நன்றி! (ஆ-ர்)

• • •

திருவனந்தபுரம், நவ. 10—
இவ்வூர் தி. மு. கழகத் தோழர் சி. பி. செல்லம் அவர்களின் சகோதரி தோழியர் முத்துலட்சுமி அம்மாளுக்கும், தோழர் சுப்பிரமணியதகிற்கும் நாகர் கோயிலை அடுத்த நலலூரில், தோழர் வி எஸ்.கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடந்தேறியது. தோழர்கள் கி. மனோகரன், டலவேசம ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ—ர்)

• • •

திருப்பாபுலியூர், நவ. 15—
தோழர் சேலம் சித்தையன் அவர்களின் தலைமையில் தோழர் கே. ஏ. குப்புசாமி அவர்களின் செல்வி கனகவல்லிக்கும், புதுவை தோழர் டி. கன்னையா அவர்களின் வளர்ப்பு மகன் தோழர் இளராசனுக்கும் 11—11—49ல் நடைபெற்ற திருமணத்தின் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் நன்றி. (ஆ—ர்.)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

22—11—49

ஆலங்குடி :— சி. பி சிற்றரசு.

23—11—49

சென்னை-புதுப்பேட்டை :— இரா. நெடுஞ்செழியன் சத்தியவாணிமுத்து, கே. ஏ. மதியழகன்

24—11—49

வந்தவாசி :— சி. பி சிற்றரசு
மங்கநல்லூர் :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி

'25 கோடி செலவிட்டு என்ன பயன் கண்டோம்?'

:0:

'அர்த்தமில்லா செலவினங்கள் அழிவுக்கே வழிகோலும்'

:0:

சர்க்காருக்கு சட்டசபை உறுப்பினர் எச்சரிக்கை

சென்னை சட்டசபையில் பொது விவாதத்தின்போது கடந்த 19-ந் தேதியன்று தோழர் சின்னகாஜியார் பேசுகையில் சர்க்காருக்கு தெளிவானவொரு எச்சரிக்கைவிடுத்தார்.

அவர் கூறினார்: "சர்க்கார் தாறுமாறாக செலவிட்டுக் கொண்டேசெல்கின்றனர்; கடன் வாங்கவும் முனைந்து நிற்கின்றனர். இன் விளைவு 'கேடும் அழிவுமாகத்தான்' இருக்குமே தவிர, வேறென்ன? உணவுப் பெருக்க உற்பத்தி இயக்கத்துக்கும், கிணறு வெட்டும் திட்டத்துக்கும் இதுவரை ரூ 25 கோடி செலவிட்டுள்ளனர். இதனால் இம் மாகாணம் பெற்ற உருப்படியான நன்மையும் பயனுமென்ன? இவ்வளவு பெருஞ்செலவு செய்தும் உணவு நிலை எப்போதும்போல் மோசமாய்த்தானே இருக்கிறது!"

இந்திய சர்க்கார் ஏற்பாடுசெய்கின்றனர்

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்தை யொட்டி, ஆந்திர மாகாண நிறுவனத்துக்கான காரியங்களையும் வழிமுறைகளை இந்திய சர்க்கார் கவனிக்க முற்பட்டுவிட்டனராம்.

வ. உ. சி. நினைவு நாள்

சண்டக்காமுத்தூர், நவ. 1[illegible]
கப்பலோட்டிய தமிழன் வ[illegible] சிதம்பரனார் நினைவு நாள், இ[illegible] திராவிடமுன்னேற்றக் கழக[illegible] சார்பாக நேற்றைய தினம் தோழர் எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் த[illegible]மையில் கொண்டாடப்பட்டது.

தோழர் சு. ஆ. கந்தசாமி அவர்கள் பேசுகையில், சிதம்பரனா[illegible] நினைவுநாள் கொண்டாட-திராவிட முன்னேற்றக்கழகத்தார் முன் வந்ததைப்பற்றி பாராட்டி விட்டு, சிதம்பரனாரின் சேவைகளையும், அவர் வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்களைப் பற்றியும், நவராக்காங்கிரசார் கொண்டாட மறந்ததைகண்டித்தும், வெகுவிரிவாகப் பேசினர்.

தோழர் சு. கு. தாண்டவன் பேசுகையில், சிதம்பரனாரின் தமிழ்த் தொண்டுபற்றி, குறிப்பிட்டு விட்டு, சத்திய மூர்த்தி, விஜயராகவாச்சாரியார் போன்ற பார்ப்பனத் தலைவர்களின் நாளை கொண்டாடு மாறு தோழர் காமராஜர் வேண்டுகோள் விடுகிறார். ஆனால் சிதம்பரனாரின் நினைவுநாளை கொண்டாட வேண்டுகோள் விடுக்க மறந்ததைக்கண்டித்தும் காங்கிரஸின் நன்றிகெட்ட தன்மையின் செயல்களை கண்டித்தும் பேசினார்.

தோழர் சு. ரா. ராமசாமி, க. வி. பழனி முதலியோர் மிகவும் நன்றாக விரிவுரை ஆற்றினர்கள்.

தோழர் சு.கு. தாண்டவன்நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கழக நிதிக்கு ரூ. 1001 தர விருதைத் தோழர்கள் முடிவு

பொதுச் செயலாளர் வருகையின்போது அளிக்கப்படும்

விருதுநகர், நவ. 15—
விருதுநகர் தி. மு. க. உறுப்பினர்களின் கூட்டம் 13—11—49ல் என். பி. எஸ். ஹாலில் தோழர் எஸ். உத்தண்டன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் இவ்வூருக்கு வரும் பொழுது, ரூ. 1001 கொண்ட பண முடிப்பு ஒன்றை கழக நிதிக்கென அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. (வி. உ.)

முதியோர் கல்விக்குப் பட்டமளிப்பு

சென்னை, நவ. 20—
கடந்த 18-ந் தேதி நடைபெற்ற சர்வகலாசாலை செனட் கூட்டத்தில் "முதியோர் கல்வி பட்டமளிப்"பை (டிப்ளோமா) ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

பத்திரிகைக் கலை, இந்திய இசை முதலிய தேர்வுகளில் தேறியவர்களுக்கும் பட்டங்கள் (டிப்ளோமா) வழங்கப்பட்டன.

[illegible]ஷ்டஈடு தருவது நல்லாட்சி முறைதானா?

கஷ்டத்திற்கு ஈடு தந்தால் கஷ்டத்தை ஈடு செய்வதெப்படி?

ஆட்சியாளர் சிந்திக்கட்டும்

ஜமீன்தாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது நியாயமே. மனிதர்களுக்கு மனிதர் நியாயம் செய்து நடக்கும் கொள்கையையே நாங்கள் அனுஷ்டிக்கிறோம். இப்படி நஷ்டஈடு கொடுப்பதால் பணப் பெருக்க நிலை மோசமாகாமலும், நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்படாமலும் இருக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் [illegible]

[illegible] உண்மையில் சென்னை மேல் சபையில் அமைச்சர் சீதாராம ரெட்டியார் அறிவித்திருக்கிறார். ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடு தருவது நியாயமாம்! மனிதருக்கு மனிதர் நீதி வழங்கு[ம்] கொள்கையின் பாற்பட்டதாம் இது! கிரம்பசரி; மனிதருக்கு [மனி]தர் நீதி வழங்க வேண்டும் [என்]ற மகத்தான உண்மையை [ஜமீ]ன்தாரர்களுக்குநஷ்டஈடு தரு[வதன்] மூலம் நிலை நாட்ட விரும்பும் அமைச்சரின் ஆற்றல் போற்றத்தக்கதே! ஆனால் 'நஷ்டஈடு' [என்]று அமைச்சர் கூறுகிறாரே, [அ]தற்குத்தான் விளக்கம் காணமுடியாமல் தவிக்கிறோம் நாம். ஜமீன்தாரர்கள் ஏதோ பெருத்த நஷ்டத்திற்குள்ளாகித் தவிப்பது போல, அவர்கள் மீது அனுதாபங்காட்டிப்பேசும் அமைச்சரைக் கேட்கிறோம், நஷ்டமென்றால் என்ன? அந்த நஷ்டத்தால் ஜமீன்தாரர்களுக்கு ஏற்படும் நஷ்டங்கள் என்ன? உண்ண உணவின்றி தவிக்கப்போகிறார்களா? உடுக்க [உ]டையின்றி வருந்தப் போகிறார்களா? இருக்க இடமின்றி ஏங்கப் போகிறார்களா? அவர்கள் இதுகாறும் அனுபவித்து வந்த அளவுக்கு மீறிய, சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட சுக போகங்கள் அளவில் சிறிது குறையுமேயன்றி, உண்மையில 'நஷ்டம்' என்ற சொல்லிக்கு உரிய பொருளுக்கு அவர்கள் ஆளாகப் போவதில்லை. அப்படியின்றி அவர்களுக்கு ஏதேனும் ஓரளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுமானால், அந்த நஷ்டத்தையும், இந்நாட்டில் வறுமையால்வாடும் மக்களின் கஷ்டத்தையும், அரசியலில் காணப்படும் பொருளாதாரக் கஷ்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஜமீன்தார்களுக்கு நஷ்டம் என்று எந்த நல்லறிவுடையதோரும் கூறத் துணியார்.

ஜமீன்தார் உரிமை, என்பது பல தலைமுறைகளாக அனுபவிக்கப்பட்டு வரும் ஒருவித கொள்ளையேயன்றி, அறிவுலகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய மனித உரிமையாகாது. அப்படிப்பட்ட உரிமை அழிக்கப்படுவதால் ஏற்படும் பலனை, நஷ்டம் என்று அழைப்பது நாகரிகம் ஆகாது. இத்தகைய உரிமையற்ற உரிமைக்கு நஷ்டஈடு என்ற பெயரால், 12 கோடி ரூபாயை செலவிடுவது மகாணாட்சி முறைக்கு ஏற்றதல்ல. ஆட்சியாளர் உண்மையிலேயே மக்கள் நல[னி]லே கருத்துடையோராயிருப்பின், மக்கள் படும் கஷ்டத்தைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டுமேயல்லாது, இந்த மகராசர்கள் படும் நஷ்டத்தைப் பற்றிக் கவலைப்படவே கூடாது. அப்படிக் கவலைப்படும் ஒரு அரசாங்கத்தை முதலாளித்வ அரசாங்கம் என்றே அழைக்க வேண்டும்.

"ஜமீன்தார்களை சந்தோஷப் படுத்தி அவர்களை ஆதரவு பெற சர்க்கார் இப்படிச்செய்வதாகக் கூறுவது தவறு" என்கிறார் அமைச்சர். ஏன் அமைச்சருக்கு இப்படிப்பட்ட ஐயப்பாடு எழுந்தது? ஜமீன்தாரர்களின் ஆதரவு பெறவே இந்த ஏற்பாடு என்று எங்கே மக்கள் மன்றம் தீர்ப்பு கூறிவிடுமோ என்று, முன் கூட்டியே சஞ்சலப்படுகிறார் அமைச்சர். அந்த சஞ்சலத்தின் விளைவாகவே இந்த வாசகம் அவர் வாயினின்று வந்திருக்க வேண்டும்.

எதற்கெடுத்தாலும் பணமில்லை என்ற பஞ்சப்பாட்டு ஒருபுறம்; மத்திய அரசியலாரின் ஆணைக்குட்பட்டு நடக்க வேண்டிய தொல்லை மற்றொருபுறம்; அதனால் விரும்பியபடி மாகாணத்தின் நிலைமையைச் சீர் செய்ய முடியாத நிலைமை ஆகிய இன்னல்களுக்கிடையே 12 கோடி ரூபாயைக்கொடுத்து ஜமீன்தாரர்களையும் திருப்தி படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது இம்மாகாண அரசாங்கமென்றால், இந்த அரசாங்கத்தால் மக்களுக்கு ஏற்படும் உருப்படியான நன்மை என்னவாக இருக்கக் கூடும் என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கு விட்டு விடுகிறோம்.

தென்னாட்டுக்குத் துறைமுகமா?

இப்போதேது பணம்!

சேற்றுக் கடற்கரை பெருந் துறைமுக அபிவிருத்திக்கமிட்டி அனுப்பியிருக்கும் அறிக்கையில் மலைபேயைப் பெருந் துறைமுகமாகக் கட்ட வேண்டுமென்று சிபாரிசு செய்திருப்பதின் மீது, இந்திய சர்க்கார் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லையென்று தெரிகிறது.

மார்முகவாவுக்கும் கொச்சிக்கு மிடையே பெருந்துறைமுகமொன்று நிறுவத் தக்க ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு இந்திய சர்க்கார் தான் முதலில் மேற் படி கமிட்டியைக் கேட்டுக் கொண்டனர். இக்கமிட்டியும் மங்களூரைக்காட்டிலும் மாலபேயே சிறந்ததென சிபாரிசு செய்தது. இக் கமிட்டியின் சிபாரிசை இந்திய சர்க்கார் ஏலாது ஒத்திப்போடுதற்குக்காரணம், பொருளாதார நெருக்கடியேயாகுமென்று கூறப்படுகிறது.

நவீன இந்தியாவின் "மனு"

ஹிந்து திருத்தச் சட்டத்தைத் தயாரித்த டாக்டர் பி. ஆர். அம்பேத்காரை எங்ஙனம் 'நவீன கால மனு' என்று அழைக்கக் கூடும் என்று அசாம் மாகாணத்தைச் சேர்ந்த தோழர் ரோகிணிகுமார் சவுதிரி கேட்ட கேள்விக்கு பதில்சொல்லுகையில், சேத் கோவிந்ததாஸ் சொன்னதாவது ;—

"புதிய இந்தியாவை சிருஷ்டிப்பதில் பெரும்பணியாற்றிய காரணத்தால் டாக்டர் அம்பேத்கார் 'மனு'' என்று அழைக்கப்படுகிறார்" என்றார்.

வறுமைக்குப் பலி!

கூத்தாநல்லூர், நவ. 17.—

கூத்தாநல்லூர் பண்டுதக் குடியில் வாழும் முருகையன் (ஆச்சாரி) மகன் சுமார் 18 வயதுள்ள சந்திரன் (ஆச்சாரி) என்பவர் தன்னுடைய பெரிய குடும்பம் வறுமையால் வாடுவதைக் காண [illegible]தானாது டி யூர் முனிசிபல் ஸ்கூலுக்கு எதிரில் ஒரு புளிய மரத்தில் வேட்டியை கழுத்தில் சுருக்கிட்டு தூக்கிட்டுக்கொண்டார் எனக் கூறப்படுகிறது. போலீசார் புலன் விசாரணை செய்து மேற்படியார், வறுமையின் காரணமாக தற்கொலை செய்து கொண்டார், என்று கூறினாராம்!

பணமில்லாதார் தரும் பன்னிரண்டு கோடி!

"எதற்கெடுத்தாலும் பணமில்லை என்று சர்க்கார் சாக்குச் சொல்கிறார்கள். ஜமீன்தாருக்கு நஷ்டஈடாகக்கோடிக்கணக்கானரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதை முழுவதும் தர்மமாக பொதுப் பணத்திலிருந்து கொடுத்துவிட வேண்டாம். அபிவிருத்தித் திட்டங்கள் அதனால் பாதகமடையும் என்பதனாலேயே நான் இந்த யோசனையைக் கூறுகிறேன்."

என்று டாக்டர் ஜான் சென்னை மேல் சபையில் விவாதத்தின் போது குறிப்பிட்டார்.

தொல்காப்பியர் இளைஞர் மன்றம்

சிதம்பரம், நவ. 14—

தில்லை தொல்காப்பியர் இளைஞர் மன்றத்தின் சார்பில் 13—11—49 அன்று எல்லைப் பிரச்சினை குறித்து ஓர் கூட்டம் நடைபெற்றது. தோழர் தில்லை அமரன் தலைமை வகித்தார். தோழர்கள் ச. குருசாமி, உ. பாலன், த. வேலன், அருணன், சிவசிதம்பரம், இராமமூர்த்தி, சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர். பின்பு, கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இந்திய முதலமைச்சர் நேருவுக்கும், சென்னை முதலமைச்சர் குமாரசாமி ராஜாவிற்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

தீர்மானம்:-தமிழகம் வடவேங்கடம் முதல் தென்குமரி வரையுள்ள எல்லைகளுடன் கூடிய நிலப் பரப்பாக உருவாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துவதோடு, சென்னை நகரை மத்திய அரசாங்கத்தோடு இணைக்க வேண்டுமெனும் ஆந்திரரின் கூற்றை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. (ஒ—வி)

வெளிவருகிறது!

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர் : C. N. அண்ணாத்துரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

விவரங்கட்கு :—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

இலங்கையில் காமன்வெல்த் மாநாடு

—: (O) :—

1950 ஜனவரியில் கூடும்

காமன்வெல்த் உறவு என்ற முறையில் முதலாளித்வ நாடுகள் அனைத்தையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது பிரிட்டன். பிரிட்டனின் இந்த முயற்சி கிழக்கத்தியநாடுகளில் கம்யூனிசம் பரவாமல் பார்த்துக்கொள்ளுவது எப்படி என்பதற்காகச் செய்யப்படும் முயற்சியேயன்றி வேறில்லை. இத்தகைய முயற்சியின் விளைவாக ஜனவரி மாதத்தில் இலங்கையில் காமன் வெல்த் மாநாடு கூடும் என்று சொல்லப்படுகிறது. இந்த மாநாட்டிற்குப் பெயர்காமன்வெல்த் வெளிநாட்டு மந்திரிகள் மாநாடாம். இம் மாநாட்டில் கலந்துகொள்ளும்படி இந்தியமுதலமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு அழைப்புவந்திருப்பதாகவும், அதை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

இம் மாநாட்டிற்கு பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி தோழர் பெவின் தலைமையில் பிரிட்டிஷ் குழுவினர் வருவார்கள்.

இம் மாநாட்டில் கீழ்க்கோடி நிலைமை பற்றியும், ஜப்பானுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வது பற்றியும் விவாதிக்கப் படுமென்று தெரியவருகிறது.

மேல் நாடுகள் சாதனை

"மேல் நாடுகள் பண்டித நேருவைக் 'கைது'தான் செய்தனவே யன்றி, அவருக்கு நன்மை யெதுவும் செய்யவில்லை. அவர் இங்கிலாந்தில் என்ன பெற்றாரோ, அதனைத் தந்தும் விட்டார். அவரது மணி விழாவைக் கொண்டாட அவர் நாட்டவர்க்கு மட்டுமே உரிமை உண்டு !"

—பெர்னாட்ஷா

இன்றியமையாப் பொருள்கள்

கட்டுப்பாடு மசோதா சட்டமாக்குவதென முடிவுசெய்யப்பட்டது

சென்னை நவ. 20—

இன்றியமையாப் பொருள்கள் மீது கட்டுப்பாடு விதிப்பதற்கென கொண்டு வரப்பட்ட மசோதா கடந்த 18ம் தேதி சென்னை மேல் சபையில் விவாதித்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கட்டுப்பாடு மக்களுக்கு நன்மையே செய்கிறதென்றும், இன்னும் மிளகாய், மிளகு, விறகு முதலிய பொருள்கள் மீதும் கட்டுப்பாடு விதிக்க யோசனை இருந்து வருவதாகவும், அவசியமான போது அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்றும், ஆகவே, இந்த இன்றியமையாப் பொருள்களுக்கு கட்டுப்பாடு மசோதா அவசியமானது என்றும் உணவு மந்திரி ரோச விக்டோரியா கூறினார். விவாதத்திற்குப்பின்னர் இக் கட்டுப்பாடு மசோதாவை சட்டமாக்குவதென முடிவு செய்யப்பட்டது.

கூட்டுறவு பாங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கி உதவி

கூட்டுறவு பாங்கிகளுக்கு அவ்வப்போது வந்துறும் தொல்லைகளை அனுதாபத்தோடு கவனித்து ஆவன உதவிவர ரிசர்வ் பாங்கி தயங்காதென்று ரிசர்வ் பாங்கி கவர்னர் சர் பெனிகல் ராமாராவ் தெரிவித்துள்ளார். 'கூட்டுறவு பாங்கிகளுக்கு உதவவேண்டியது எனது விருப்பமும் கடமையுமாகும். நான் கவர்னராயிருக்கும் வரை கூட்டுறவு இயக்கத்தை நான் மறக்கமாட்டேனென்பதோடு, எனது முழு ஆதரவை அதற்களித்து வருவேனென உறுதி கூறுகிறேன்' எனக் குறிப்பிட்டார் சர் ராமாராவ்.

உற்பத்தியாளர் உறுதிமொழி

அடுத்த பருவத்தில் இப்பருவத்தைக் காட்டிலும் ஒரு லட்சம் டன் அதிகமான சர்க்கரையை உற்பத்தி செய்வதாக ஐக்கிய மாகாண, பீகார் உற்பத்தியாளர்கள் இந்திய உதவிப் பிரதமர் சர்தார் படேலுக்கு உறுதிமொழி அளித்துள்ளனராம்.

சர்வதேச கோதுமை கவுன்சில்

சர்வதேச கோதுமை கவுன்சிலின் நிரந்தரத் தலைமை நிலையமாக லண்டனைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இங்கு ஆண்டுக்கு இருமுறை கூட்டங்கள் நடைபெறும். உலக தானிய சப்ளை [illegible] முறையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இங்கு திட்டங்கள் தீட்டப்பெறும்.

கன்னம் வைத்துக் களவாடுகிறவனை இந்தியன் என்பதற்காக மன்னிப்பதா?

வடுகபட்டியில் வாலிபர்கள் வெற்றி!

தி. மு. க. துவக்க விழாவில் தோழர் ஆசைத்தம்பி விளக்கம்

வடுகபட்டி, நவ. 11—

மதுரை மாவட்டத்தில் உள்ள இச்சிற்றூரில், நேற்று மாலை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா சல்லுபட்டி தோழர் பு. இராமசாமி தலைமையில், மிகச் சிறப்புடன் ஆரம்பமாகியது பெரியகுளம், தேனி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், புதுப்பட்டி, எண்டப்புளி, காமாட்சிபுரம், நல்லகருப்பன்பட்டி, கல்லுப்பட்டி, காமக்காபட்டி, மெட்டுப்பட்டி, சில்வார்பட்டி, நாகம்பட்டி, தாமரைக்குளம் ஆகிய சுற்றுக் கிராமங்களில் இருந்து பெருவாரியாக இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். அச்சிற்றூரில் 5000-க்கு மேற்பட்ட மக்கள் கூடி இருந்ததானது அவ்வூர் மக்களுக்கே ஆச்சரியம் தருவதாய் இருந்தது. இதுவரை திராவிடர் இயக்க சம்பந்தப்பட்ட எந்தக் கூட்டமும் அங்கு நடைபெற்றதில்லை. முதற் கூட்டம் இவ்வளவு சிறப்பாகவும், அமைதியாகவும் நடந்ததானது திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைக்கு நல்ல ஆதரவு கவர்ச்சியும் இருப்பதை நன்கு தெளிவுபடுத்துவதாய் இருந்தது.

துவக்க விழாப் பணியாற்ற வந்த விருதுநகர் தோழர். ஏ. வி. பி. ஆசைத்தம்பிக்கும், தலைவருக்கும் பெரியகுளம் தேனி திராவிட முன்னேற்றக் கழக மாணவர்களால் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. தலைவர் முன்னுரை நிகழ்த்தினார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பின்னர் தோழர் ஆசைத்தம்பி விளக்க உரை ஆற்றியதின் சுருக்கம்:—"இந்த சிறிய ஊரில் மாபெரும் கூட்டத்தைக் கண்டு மகிழ்கிறேன். இந்த ஊரில் காங்கிரஸ் கூட்டத்தைத் தவிர திராவிட இயக்கக் கூட்டம் எதுவும் இவ்வளவு உணர்ச்சி இருந்தும் நடைபெறவில்லை. நடத்த நாட்டங்கொண்ட வாலிபர்களையும் ஒரு கூட்டத்தார் தடுத்து வந்தனர் என்பதறிந்து வருந்துகிறேன். இந்த கூட்டத்தையும் நடக்க ஒட்டாமல் தடுக்க அவர்கள் எத்தனையோ இடையூறுகள் செய்தும் இளைஞர்களின் வேகத்தைத் தடுக்க முடியவில்லை. இது வாலிப உலகத்திற்குக் கிடைத்த வெற்றி. வருங்காலம் வாலிபர்கள் கையில் உள்ளது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இரயில் வருவது இலாபந்தானே?

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்ப்பு இருக்க வேண்டிய அவசியமே இல்லை. இரயில் தோன்றி முப்பது வருடங்களாகின்றன. ஆனால், இந்த ஊருக்கு இன்னும் இரயில் வரவில்லை. இரயில் வருவது இந்த ஊருக்கு நஷ்டமா? லாபமா? இரயிலைப் போன்று இன்ப வழி காட்டுவதுதானே எங்கள் கழக லட்சியம். பின் ஏன் எதிர்ப்பு? இரயில் வருவதை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்காவது இருந்தால் அது பஸ் சொந்தக்காரர்களுக்கு வேண்டுமானால் இருக்கலாம். இரயில் வந்தால் எங்கே தங்களுக்கு முன்போல் லாபம் கிடைக்காமல் போகுமோ என்று பஸ் சொந்தக்காரர்கள் சிலருக்குச் சுயநல எண்ணம் எப்படி இருக்குமோ, அதைப்போலவே இந்த ஊர் காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு வெருண்டு, தடுப்பு வேலை செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே நாணயமுள்ளவர்கள் யாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு பயப்படத் தேவையில்லை. அது மட்டுமல்ல, காங்கிரசும் அதைச் சேர்ந்தவர்களும் நேர்மையோடும், நீதியோடும் உழைப்பதாய் இருந்தால் இந்த நாட்டுக்குத் திராவிட முன்னேற்றக் கழகமே தேவைப்படடிருக்காது.

திருந்துவதுதான் நேர்மை

எங்களைப் பற்றி காங்கிரஸ் நண்பர்கள் பொய்யை மெய்போல் உங்களிடத்திலே பேசியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். காங்கிரஸ் எது செய்தாலும் எதிர்ப்பதுதான் முன்னேற்றக் கழகத்தின் வேலையாம்! நீங்களே சிந்தியுங்கள். ஆலயப் பிரவேசச் சட்டத்தை எதிர்த்தோமா? மதுவிலக்கை எதிர்த்தோமா? ஜமீன்தாரி ஒழிப்பை எதிர்த்தோமா? அறநிலைய பாதுகாப்பு மசோதாவை எதிர்த்தோமா? ஆதரித்தோமே. ஏன்? நல்லது செய்யும்போது ஆதரிக்க வேண்டும். அதுதான் நேர்மை. இதைவிட்டு குறைகளையும் ஆதரிக்க முடியுமா? குறைகளை நாங்கள் கூறுகிறபோது அவைகளைத் திருத்திக்கொள்வதுதான் நேர்மையே தவிர, திருத்த வேண்டும் என்று கூறுகிற முன்னேற்றக் கழகத்தைப் பற்றி, காங்கிரஸ்காரர்கள் கன்னாபின்னா என்று பேசுவது முறையா? இப்படி நடுநிலையோடு நாட்டுக்கு உழைக்கிற முன்னேற்றக் கழகத்திற்கு இடையூறு செய்வது நீதியா?

கோவிலை இடிக்கவா?

நாங்கள் கோவில்களை இடிக்கப்போகிறோமாம்! இப்படியா காங்கிரஸ்காரர்கள் பேசுவது? நாங்கள் இதுவரை எந்தக் கோவிலை இடித்திருக்கிறோம்? பாழடைந்த நிலையில் உள்ள கோவில்களைப் பழுது பார்த்துப் பயன்படுத்தவேண்டும் என்கிறோம். இது குற்றமா? சிதைந்த நிலையில் உள்ள கோவில்களைச் சீர்திருத்த வேண்டும் என்கிறோம். இதற்குப் பெயர் இடிப்பதா? இந்து மதப் பரிபாலன போர்டார் கூட கோவில்களில் அடைந்துள்ள வௌவால்களையும், பெருச்சாளிகளையும் ஒழித்துச் சுத்தப்படுத்த முயற்சிக்கப் போகிறார்கள். இவர்களைப் போலவே முன்னேற்றக் கழகம், கோவில்களில் குடிபுகுந்துள்ள பார்ப்பனீயம் என்ற பழம் பெருச்சாளிகளை அப்புறப்படுத்தி, அசுத்தத்தைப் போக்க வேண்டும் என்று சொல்லுகிறது. இதற்குப் பெயர் இடிப்பதா? எண்ணிப் பாருங்கள்.

பதவி நீடிக்கவேண்டுமா?

காங்கிரஸ் நண்பர்கள் இடைப்படி விஷமப்பிரச்சாரம்செய்து தங்கள் பதவிகளைப் பாதுகாத்துக்கொள்ள நினைப்பது பகற்கனவு இப்படி வீண் முயற்சியில் இறங்குவதைவிட, காங்கிரஸ் நண்பர்கள் கொஞ்சம் நேர்மையாக நடந்தால் அவர்கள் பதவியும் நீடிக்கும் நாட்டிற்கும் நன்மையாயிருக்கும். மற்றப்படி அவர்களுக்குத் தான் கேடு. எதிர்க் கட்சிகளை நடக்க விடாமல்செய்தாலோ, அடக்கி விடுவதாலோ, அதன் கொள்கைகளை ஒழித்துவிடமுடியாது நாட்டுக்குத் தேவையான கருத்து எங்கு இருக்கிறதோ, அங்குதான் மக்கள் சக்தி ஐக்கியமாகும். அதற்கு இக்கூட்டமே நல்ல எடுத்துக்காட்டு.

நாகரிக திருட்டுதான் சுரண்டல்

வரியைக் குறைப்போம்! வரியே இல்லாமல்கூடச் செய்வோம்! என்று வாய் வலிக்கப் பேசிய காங்கிரஸ்காரர்கள், புதுப் புது வரியைப் போட்ட வண்ணம் இருக்கிறார்கள். பல ஆரம்பப் பள்ளிகளுக்கு மூடு விழா கொண்டாடப்போகிறார்கள். ஏன்? நம்முடைய பணத்தை எல்லாம் வடநாடு வரியாகப் பெற்றுக்கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க வேண்டும் என்று முன்னேற்றக் கழகம் கூறினால், வடநாட்டான் நம் சகோதரனாம்! அடுத்த வீட்டுக்காரன் என்றாலும் காலணா இனாம் கொடுப்பதில்லை. கொடுத்தாலும் கடன் என்று சொல்லி, கணக்கு எழுதிக்கொண்டு கொடுக்கிறோம் வடநாட்டுக்கு மட்டும் ஒரு நீதியா? கன்னம்வைத்துக் களவாடுகிறவனும் காங்கிரஸ் அகராதிப்படி இந்தியன்தான்! சகோதரன்தான்! அதற்காக அவன் திருடுவதை எந்தக் காங்கிரஸ்காரராவது பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா? சுரண்டல் என்பதும் நாகரிகத் திருட்டுத்தானே? இதைத் தடுக்க முன்னேற்றக் கழகம் உழைக்கும்போது கேலி பேசுவானேன்? இது அவசியமில்லையா?

தோட்டத்திற்கு வேலிபோல

சுரண்டலைத் தடுக்கவேண்டுமானால் நாடு பிரியவேண்டும். பிரிவினை என்றால், நாட்டை வெட்டி நடுக்கடலில் வைப்பார்களோ என்று நடுங்க வேண்டியதில்லை. தோட்டத்திற்கு ஒரு வேலி அவசியம் என்பதைப்போல, நாட்டைச் சுற்றிப் பாதுகாப்புஎல்லை நாம் அமைக்கவேண்டும். அந்த எல்லையைக் கடந்து யாராவது உள்ளேவருவதாய் இருந்தால், அனுமதி சீட்டு வைத்திருக்க வேண்டும். இதுதான்பிரிவினை இப்பிரிவினைவேண்டாமா? சிந்தியுங்கள்! இப்படி நல்லாட்சியை நிறுவி, நமக்குப் பாதுகாப்பளிப்பதே முன்னேற்றக் கழக நோக்கம். இனிமேலாவது அவருடைய எண்ணங்களை நீக்கிவிட்டு, இக்கழகத்தைப் பலப்படுத்த வேண்டுகிறேன்" என்பதாகப் பேசி முடித்தார்.

முப்பது கேள்விகளுக்கு மேல்கேட்கப்பட்டன. அனைத்திற்கும் பதில் சொல்லிய பிறகு, செயலாளர் நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது.

(க. நி.)

ஆசிரிய நக்கு முடங்கல்

விளக்கம் வேண்டும்

ஐயா,

17 11 49 அன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இவ்வூர் உயர்நிலைப் பள்ளியின் சார்பாக கம்பர் விழா நடைபெற்றது. மாவட்ட உதவி கலெக்டர் (Deputy collector) தோழர் தங்கமணி நாடார் தலைமை வகித்தார். அதுபோது சுமார் 50 பேர் கூடியிருந்தனர் (பொதுமக்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் உள்பட) ஆரணி வழக்கறிஞர் தோழர் தேவராஜ ராவ் கம்ப இராமாயணத்தைப்பற்றி சமஸ்கிருதம், தமிழ் இரண்டையும் கலந்து பிரசங்கம் செய்தார். அவ்வமயம் இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் சு. மா. அண்ணாமலையால் 5 கேள்விகள் கேட்கப்பட்டன. வினாக்களைப் படித்துவிட்டு விடையளிக்கத் திறமையின்மையால், 'அதிக நேரம் கடந்துவிட்டது' என்றும் தனக்கு கம்ப இராமாயணத்தில் பலமையில்லை யென்றும் கூறி மழுப்பிவிட்டார். பின்னர் இவ்வூர் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் தோழர் இரா கோபாலய்யர் பேசும்போது, 'நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, உ. வே. சி. போன்ற அறிஞர்களெல்லாம் கம்ப இராமாயணத்தின் சில பகுதிகள் விளங்காமல் விழிக்கின்றனர்' என்றும், ஆகையால் நம் போன்றோர் அதை அறிந்துகொள்ளாது இருப்பது அதிசயமல்லவென்றும், அத்தகைய சீர்திவாய்ந்த கம்ப இராமாயணத்தை எல்லோரும் அறிந்து கார்லியார் விரும்பிய இராமஇராச்சியத்தை நிர்மாணிப்போம் என்றும், அறிவுக் கொவ்வாத—அடிசியமற்ற முறையில் பேசினர். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், திருக்குறளைப் போல் கம்ப இராமாயணத்தையும் கட்டாயபாடமாக்க வேண்டுமென்று பேசினர்.

பல கோடிமக்களைத் தாழ்த்தப்பட்ட மக்களாக்கியும், வங்கம், பஞ்சாப், பீகார், டில்லி போன்ற இடங்களில் பலலட்சம் மக்களைப் பலிவாங்கியதுமான இந்த மதத்தை,- கொடும் மதவெறியை வளர்க்கும் கம்ப இராமாயணம் போன்ற நூல்கள் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமாம் இதற்கு குறளை உதாரணம் காட்டுகிறார். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற கொள்கையுடைய குறள் எங்கே? மக்களைமடமையில் ஆழ்த்திமதவெறியை உண்டாக்கும் கம்ப இராமாயணம் எங்கே? இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்க இரண்டையும் ஒப்பிடுகிறார் விளக்கம் வேண்டும். அளிப்பார்களா கம்பர் குழுவினர்? பொறுத்திருந்து பார்ப்போம்.

களமபூர்
18—11—48 } ந. கணேசன்

செங்கற்பட்டு தோழர்கட்கு

நமது "மாலை மணி" பத்திரிகையை செங்கற்பட்டில் கீழ்க்கண்ட புதிய ஏஜண்ட் இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

R. எத்திராஜன்
92, பெரிய சாலை,
செங்கற்பட்டு.

இராமநாதபுர மாவட்டத் தோழர்களுக்கு

சந்தா புத்தகங்கள் நமக்குத் தேவையான அளவு இன்னும் வரவில்லை. எனவே, வந்தவைகளை கூடியவரை உத்தேசமாக பங்கிடு செய்து மாவட்டத்திலுள்ள கிளைக்கழகங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அவைகளைப்பெற்றுக்கொண்டு உறுப்பினர்களைச் சேர்க்க முயல்வதுடன், சந்தா புத்தகங்கள் எதுவுமே கிடைக்கப்பெறுதவர்களும், போதுமான அளவு கிடைக்கப் பெறுதவர்களும், இன்னும் எத்தனை உறுப்பினர்கட்கு சந்தா ரசீதுகள் தேவை என்பதை எனக்குத்தெரியப்படுத்த வேண்டுகிறேன். ஏற்கனவே, சந்தாபுத்தகங்கள் பெற்றுக் கொண்டவர்கள் சந்தாக்களை சரசரசர தலைமைக்கழகத்திற்கும், மாவட்டக்கழகத்திற்கும் உரிய அடிச்சீட்டுகளை உடனுக்குடன் அனுப்பி விடுவதுடன், சந்தா தொகையில் பாதிப் பணத்தை தலைமைக்கழகத்திற்கு சேர்ப்பிப்பார்களாக.

அன்பன்
M. S. இராமசாமி
தி.மு.க. அமைப்புக்குழுவினர்
இராமநாதபுரமாவட்டம்
அருப்புக்கோட்டை.

பெயரிடல்

ஆண்டிப்பட்டி, நவ. 15—

இவ்வூர் தோழர் சு. மா. குருசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் காசியம்மாளுக்கு 3-11-49 ல் பிறந்த ஆண் குழந்தைக்கு, "புத்தர்" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய்ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

* * *

கோவை, நவ. 8—

இவ்வூர்(ஸ்டார் பேக்கரி)தோழர் சி. வி. கோபால் அவர்களுடைய குழந்தைக்கு 6-11-49 அன்று "சாரு பவனம்" இல்லத்தில் பெயர் சூட்டுவிழாவை பெற்றது. தோழர்கள் உடுமலை கனகராசன், பெத்தாம்பாளையம் பழனிசாமி, திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், ஈ. வி. கே. சம்பத் ஆகியோர் விழாவிற்கு வந்திருந்தனர். அதுபோது தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களால் குழந்தைக்கு "வீரமணி" எனப் பெயரிடப்பட்டது. பிறகு அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டு விழா சிறப்புற முடிவுற்றது. இதன் நினைவாக ரூபாய் மூன்று வரப்பெற்றோம். நன்றி!

* * *

பருகூர், நவ. 14—

இவ்வூர் தோழர் பி. டி. வெங்கடப்பன் அவர்களின் சகோதரிக்கு 24-10-49 ல் பிறந்த குழந்தைக்கு 13-11-49 அன்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களால் (திருப்பத்தூரில்) "வீரமணி" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-)

* * *

தேனி, நவ. 15—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரின் உடன் பிறந்தார் தோழர் சுப்பிரமணியம் அவர்களின் துணைவியார் தோழியர் புஷ்பத்திற்கு 14-11-49-ல் பிறந்த பெண்மகவுக்கு "கலைமணி" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் "மாலை மணி"

முதலாளிகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறோம். இறுதியாக, வடநாட்டு ஆதிக்கம், தொடர்பு எத்துணையுமற்றதொரு அரசியல், திராவிடப் பெருங்குடி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உண்மைப் பிரதிநிதிகள் வகுக்கும் ஒரு அரசியல், அந்நியாசுரண்டலை அனுமதியா அரசியல் தாம் நம் லட்சியம் என எடுத்தோதி, திராவிட நாடு பிரிவினைக்கு ஆக்கம் தேட வருகிறோம். எனவே, அரசியல்-பொருளியல் — சமுதாய இயல் இன்ன பிற துறைகளில் அயலார் ஆதிக்கத்தையோ, தலை நீட்டலையோ சிறிதும் விரும்பாது சுதந்திர சுயேச்சைத் தன்மானத் திராவிடத் தனியரசையே பிறப்புரிமையாகப் பிரசாரஞ்செய்து, பணி பல மேற்கொண்டுவரும் திராவிட இயக்கத்துக்கு இன்றைய இந்தியாவின் புதிய அரசியல் முதலாளிகளின் சுவர்க்கமாக மட்டும் காட்சியளிக்கவில்லை. லட்சாதி லட்சம் மக்களின் எண்ணத்தில் மண்ணைப் போட்டு இடர் தரும் திட்டமாகமட்டும் காட்சியளிக்கவில்லை, நாடாண்ட நாலரை கோடி மக்களை வேட்டையாடிப் பிடிக்கத் தயாரிக்கப்பெற்ற 'யந்திரப்பொறி'யாகவும் காட்சியளிக்கிறது; இத் தென்னாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களை என்றென்றும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்தி வைக்க செய்யப்படும் நிரந்தர ஏற்பாடாகவும் காட்சியளிக்கிறது. இத்தகைய அரசியலை தன்மானப் போர் முரசு கொட்டத் துவக்கிவிட்ட திராவிடர் தலைவணங்கி ஏற்கப்போவதேயில்லை.

சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் தோழர் சேத். பொதுப் படையாகப் புதிய அரசியலின் குறைபாடுகளை எடுத்துக் காட்டி வருகையில் மேலும் கூறியதாவது:-புதிய அரசியலில் பாட்டாளி மக்களுக்கு 'வாழ்க்கைச் சம்பளம்' அளிக்கக்கூடியதாக ஒரு விதியையும் காணோம். ஏழை, எளிய, பராரி மக்களுக்கு நம்பிக்கைத் தரக் கூடிய நல்லதிட்டம் எதுவுமே காணோம். பொது மக்களின் பிரதிநிதிகளல்லாத வேறு சிலர் வகுத்த அரசியல் இது வாகையாலதான் அவர்கள் நலத்துக்கான அம்சம் எதுவுமே காணோம். மறைமுகமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; அதனால் தான் முதலாளிகளுடையவும், அரசியல் வாதிகளுடையவும் சுவர்க்கமாகக் காட்சியளிக்கிறது.

சொத்து பற்றிய சட்டம் 'இந்திய சர்க்கார் சட்டத்தில்' கண்டபடியேதான் இருந்து வருகிறது.

தோழர் சேத் மேலும் சொன்னார்: முதலாளித்துவம் நீடிக்கும் வரை பட்டினி, பசி, வறுமை நம்மைவிட்டு அகலமாட்டா; அகற்றவு முடியாது. சமஸ்தானங்களில 'ஜாகீர்தாரி' (நிலச்சுவான்தாரி) முறையை ஒழிக்கவும் நிபந்தனை யெதுவுங்காணோம். 'அவசர காலங்களில்' தலைவருக்கு மிகவும் அதிகமான அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

சோஷலிஸ்ட் பிரதிநிதி தனது பேச்சு முடிவில், 'இது காரணங்களால்தான், அதிகாரம் தன் கைக்கு வந்தால் வயது வந்தோர்க்கு வாக்குரிமை அடிப்படையில் புதிய அரசியலமைப்புசபை நிறுவப்படுமென இந்திய சோஷலிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் தனது போக்கில் வெளியிட்ட கருத்துக்கள் பல வற்றை நாமும் பொதுவாக ஆதரிக்கிறோமென்னும், அவையனைத்தும் 'ஒப்பியல் அரசியல் முறை ஆராய்ச்சி'யாளர் என்ற நிலையிலிருந்து தானே தவிர, நமக்கான—நமக்குரிய அரசியல் என்ற நிலையிலிருந்தல்ல! இந்திய யூனியன் அரசியலைப்பற்றிய நமது கருத்தை மேலே தெளிவு படுத்திவிட்டோம். சோஷலிஸ்ட் கட்சியினர்க்கு இந்த அரசியல் முதலாளிகளின் சுவர்க்கமாகத் தோன்றினால், திராவிட இயக்கத்தாருக்கு ஆதிக்ககாரரின் 'யந்திரப் பொறி'யாகவும் தோன்றுகிறது.

சீன தேசீய சர்க்கார் மக்கள் பிரதிநிதிகளல்லர்!

அவர்களைச் சேர்க்காதே!

ஐ நா. சபைக்கு கம்யூனிஸ்ட் சர்க்கார் ஆணை

சீன கம்யூனிஸ்டுகளின் முன்னேற்றம் வெகுவேகமாக வளர்ந்து வருகிறது. சீனாவின் பெரும்பகுதி கம்யூனிஸ்டுகள் வசம் சிக்கி விட்டது. மக்களும் கம்யூனிஸ்ட் சர்க்காருக்குத் தமது முழு ஆதரவையும் தரமுன் வந்து விட்டனர். ஆனாலும், ஆசை, வெட்கம் அறியாது என்பதற்கிணங்க சீன தேசிய சர்க்கார் இன்னமும் தாமே மக்கட்பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு ஐ. நா. சபைக்குக் காவடி தூக்கிக் கொண்டு ஓடுகின்றனர்.

இதையறிந்த கம்யூனிஸ்ட் சர்க்கார் ஐ. நா. சபைக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளது. அதில், இப்பொழுது ஐ நா. வில் உறுப்பினராக இருந்துவரும் சீன தேசீய சர்க்கார் தூதுக்குழுவினர் மக்கட் பிரதிநிதிகளல்லர் என்றும், ஆகவே அதனை உடனிருந்து ஐ நீக்கும்படியும் ஐ. நா. சபைப்பொதுச் செயலாளர் தோழர் ட்ரிக்விலிக்கும், தலைவர் ஜெனரல் கார்லஸ் ரோமுலோக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகச்சொல்லப்படுகிறது.

இங்ஙனம் 'அவர்களைச்சேர்க்காதே!" என்று ஐ நா. சபைக்கே ஆணையிடும் அளவுக்கு சீனக் கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கி விட்டதைக் கண்டேனும் அதேதன்ன நம் இந்திய நாட்டு முதலாளிகள் தம் சித்தம் தெளிந்து செயலாற்றி மக்களின் ஆதரவுக்காளாவார்களாக!

குதிரைப் பந்தயம் ஒழிகிறது!

சென்னை, நவ. 19—
கிண்டியில் குதிரைப் பந்தயம் நடைபெறும் ஒவ்வொரு தினமும் வழக்கம் போல் பாரீஸ் கார்னர் ஒப். எச். சி ஏ யிலிருந்து கிண்டிக்கு சர்க்கார் பஸ் விடப்படும்! ஆள் ஒன்றுக்குக் கட்டணம் அணா 8.

காசு கரியாகிறது!

பீகார் மந்திரிகளின் கோடைவாசத்துக்கென (மூன்று மாதகால மட்டுமே) ஒன்பது கட்டடங்கள் நிறுவ பீகார் சர்க்கார் ரூ. 9 லட்சம் அனுமதித்தனர். கட்டிட வேலை முடிந்ததும் மந்திரிகள் தங்களது கோடைவாசஸ்தல நிலையங்கட்குச் சென்றனராம். அங்கு சென்று தங்கிய உடனடியாக கட்டடங்களுக்குப் பெரும் கூடங்கள் இல்லையென்று புகார் கூறி, அவற்றை அப்படியே இடித்துத் தரை மட்டமாக்கிவிட யோசனை கூறினராம்!

பொதுப் பணத்தைக் கரியாக்குவதில் மக்கள் சர்க்கார் எவ்வளவு தாராளமாயிருக்கிறார்கள் என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டாகும்.

—'பிளிட்ஸ்'

முதல் பாரத்திலிருந்தே இந்தியாம்!

முதல் மூன்று பாரங்களிலாவது பள்ளிமாணவர்களுக்கு இந்தி போதிப்பது கூடாது என்று நாம் வலியுறுத்திக் கூறி வருகிறோம். ஆனால் ஹிந்தி மொழி சக்திச் சுற்றி அந்த மூன்றும் பாரத்துக்குள்ளாகவே புகுந்து தமிழ்நாட்டு இளைஞர்களின் தாய்மொழிப்பற்றை வேட்டையாடப் பார்க்கிறது.

கடந்த 19ம்தேதி சென்னையில் கூடிய ஆசிரியர்கள் சங்கக் கூட்டத்தில் தற்போதைய படிப்புத் திட்டப்படி ஹிந்தி போதனை முதல் பாரத்திலிருந்தே ஆரம்பமாகவேண்டுமென்றும், தேவநாகிரி எழுத்து மூலமே போதனை நடைபெற வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு வாரத்தில் நான்கு வகுப்புகள் (Period) சமஸ்கிருதத்துக்கும் இரண்டு வகுப்புகள் மாகாண மொழிக்கும் கொடுக்கலாமென்ற ஆலோசனையுங் கூறப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான அகவுணர்வு!

லண்டன், நவ 16—
இங்கிலாந்தைச் சேர்ந்த ராபர்ட் ஜென்ஸ் என்னும் ஒருவர், மணிக்கு 90 மைல் பறக்கக்கூடிய விமானக்களை வெகு திறமையுடன் சவாரி செய்து வருகிறாராம்.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

சிவகாசி— நகரக் கிளை

சிவகாசி, நவ. 15—
இவ்வூர் திராவிட கழகத்தினர் 13-11-49-ல் தோழர் கூ. சு. சு பெரியகுப்புசாமி பூங்காவில் கூடி இவ்வூர் திராவிடர் கழகத்தை "திராவிட முன்னேற்றக் கழகம்—சிவகாசி நகரக்கிளை" என (ஏகமனதாக) மாற்றி யமைத்தனர். கீழ்க்கண்ட புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- ஆரோக்கியசாமி தங்கையா; துணைச்செயலாளர்கள்- எஸ். டி. சங்கர், மு. நடராசன்; பொருள் உறுப்பினர்- எஸ் ஏ. காளியப்பன்; விளம்பர உறுப்பினர்- க. செ. பழனிச்சாமி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (த-செ)

* * *

நாமகிரிப்பேட்டை—சிற்றூர்க்கிளை

நாமகிரிப்பேட்டை, நவ. 15—
இவ்வூர் திராவிடர்கழகச் செயற்குழுக்கூட்டம், 13-11-49 மாலை 5-மணிக்கு தோழர் எஸ். அழகுநின் அவர்கள் லைக்கில் கடையில் கூடியது. தோழர் சே. முத்துக்கிருஷ்ணன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். அதுபோது இவ்வூர் திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்— நாமகிரிப்பேட்டை சிற்றூர்க்கிளை' எனமாற்றப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-சே. முத்துக்கிருஷ்ணன்; துணைசெயலாளர்:-பி பழனியப்பன்; பொருள் உறுப்பினர்:-- ஆர். அருணாசலம்; விளம்பர உறுப்பினர்:—வி. எஸ். வரதன், ஏனைய செயற்குழுவினர்:—எம். மாரியப்பன், பி. பெருமாள், ஆர். பழனிவேல், கே. ராமசாமி, பி. பொன்னுசாமி, எம். ஆறுமுகம். கூட்டத்திற்கு பேளுக்குறிச்சி தி. மு. க. செயலாளர் தோழர் ஓ. கே. ப. சுப்பிரமணியம் அவர்களும் வந்திருந்தார்கள். (வி-வி)

* * *

தங்காவி—சிற்றூர்க்கிளை

தங்காவி, நவ. 15—
உடுமலை தாலுகா, தங்காவி திராவிடர் கழகச்செயற்குழுக் கூட்டம், 12—11—49ல் கூடியது. அதுபோது, தங்காவி "திராவிட முன்னேற்றக்கழகம்-தங்காவி சிற்றூர்க்கிளை" என மாற்றி திறவப்பட்டு, கீழ்க்கண்ட புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளரும், பொருள் உறுப்பினரும்:—அ. ஆறுமுகம்; விளம்பர உறுப்பினர்:— த. இராமசாமி அமைப்பாளர்:-கி. பழனியப்பன் பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (கி-உ)

* * *

வடசென்னை (3வது வட்டம்) நகர உட்கிளை

சென்னை, நவ. 15—
சென்னை 3-வது வட்ட தி.மு க. அமைப்புக் கூட்டம் 8—11—49ல் சென்னை வண்ணையம்பதி கல்மண்டபம் ரோடு 14—எண்ணுள்ள இல்லத்தில்நடைபெற்றது. தோழர் பி. ராமசாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர 3-வது வட்டம் உட்கிளை" திறவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். கே. அண்ணாமலை, துணைச்செயலாளர்:-ஏ. குருசாமி. பொருள் உறுப்பினர்:-எம். சுப்பிரமணி, விளம்பரஉறுப்பினர்:- எஸ். சே. வீரமணி. மற்றைய 12 செயலுறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (கி-உ)

• • •

வனவாசி சிற்றூர்க்கிளை

வனவாசி, நவ. 15—
சேலம் மாவட்டம் வனவாசியில் 14—11—49 அன்று திராவிட இயக்கத் தோழர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—வனவாசி சிற்றூர்க்கிளை" திறவப்பட்டு; கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-ச.சிரங்கன், துணைச் செயலாளர்:—கை. தங்கவேல், பொருள் உறுப்பினர்:—ச. மொ. அங்கப்பன், விளம்பர உறுப்பினர்:- கி. இராச கோபாலன். ஏனைய செயற்குழுவினர்:—ப. சண்முகம் வி. கோவிந்தன், மூ. கலியபெருமாள், ரா. விசுவநாதன், ச. மா. தேரன், ச. இராசமாணிக்கம். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (கி-உ)

• • •

பன்னுன்கொம்பு—சிற்றூர்க்கிளை

பன்னுன்கொம்பு, நவ. 19—
திருச்சி மாவட்டம், பன்னுன் கொம்பு தி. மு. க. அமைப்புக் கூட்டம் 18-11-49-ல் கூடியது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—பன்னுன்கொம்பு சிற்றூர்க்கிளை' திறவப்பட்டு, கீழ்க்கண்ட புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளரும், நிதி உறுப்பினரும்— பா. மூர்சாமி; துணைசெயலாளர்— க. பொன்னுசாமி; விளம்பர உறுப்பினர்கள்— ஆ. மூக்கன், க. முத்துசாமி; ஏனைய செயலுறுப்பினர்கள்:— ரா கூழையர், ந. சின்னசாமி, கே. சின்னையா, எஸ். கணேசன், இ. துரைசாமி, ப. வரதன், ரா. பா. பொன்னுசாமி. பின்பு, தி. மு. கழகம் ஏற்பட்ட அவசியம் குறித்து தோழர் சித்திரபுத்திரன் விளக்கிப் பேசினர். (செ-ர்)

திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம்

சிலக்கோட்டை, நவ. 10—
இவ்வூர் இளைஞர் திராவிடர் கழகச் செயற்குழு 4-11-49 அன்று கூடியது. அதுபோது திராவிட இளைஞர் கழகத்தை, திராவிட இளைஞர் முன்னேற்ற கழகமாக மாற்றப்பட்டது. பின்பு ஓர் புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்: ஆர். ராசேந்திரன், செயலாளர்:- எஸ். நடராசன் பொருள் உறுப்பினர்:-ஜி ராசேந்திரன் குழு செய்பவர்கள் வி. பாஸ்கரன் பி.மாரிமுத்து. துவக்க விழாவை 15 1-50 நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. (செ—ர்)

மிளகு வியாபார தற்காலிக நிறுத்தம்

கோட்டயம், நவ. 20—
மிளகு மீது ஏற்றுமதி வரி விதிப்பது பற்றிய தகவலொன்றை யொட்டி மிளகு வியாபாரம் முற்றிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அறிவிப்பு

ரெடிமேட் முட்டை பவுடர். முட்டைப்பூச்சி தொல்லை ஒழிக்கும் தரமான நிவாரணி ... சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1